நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 68 /2020**

**P.W. 6 -ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பத்ரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | அய்யாவு |
| கிராமம் | : | கருங்கல்லூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 6 |
| வயது | : | 55 |

*1969-ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969-ஆம் வருடத்திய 44-வது மத்திய சட்டம் )-ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025-ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 05-ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜரில் இல்லை.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:- 12.01 PM)

1. நான் தற்போது மேட்டுர் வனச்சரகத்தில் உள்ளுர் தண்டா குரும்பனூர் வடக்குபீட் வனக்காப்பாளராக பணி புரிந்து வருகிறேன். 14.12.2019 ல் சுமார் காலை 7.00 மணிக்கு எனக்கும் என்னுடைய வனவர் சுந்தர்ராஜ் வனவர் அவர்களுக்கும் தகவல் கிடைத்தது. இலக்கம்பட்டி கிராமம் பெரியதண்டா பெரியசாமி மகன்

தங்கவேல் தோட்டத்தில் ஒரு ஆண் யானை இறந்து கிடந்தது.

2. உடனே நானும் எங்கள் சுந்தர்ராஜ் வனவரும் வனச்சரகருக்கு முதல் தகவல் கொடுத்தோம். பரசுராமமூர்த்தி வனச்சரகர் உடனே சம்பவ இடத்திற்கு வந்து விட்டார். வனச்சரகர் மற்றும் நாங்கள் மூவரும் மாவட்ட வனஅலுவலுருக்கு தகவல் கொடுத்தோம். அவரும் உடனே சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்.

3. மாவட்ட வன அலுவலர் யாணையை பார்த்து விட்டு கால்நடை மருத்துவர் பிரகாஷ் அவர்களுக்கு தகவல் கொடுத்தார். கால் நடை மருத்துவர் யாணையை பார்த்தபின்பு மின்சார வாரியத்துக்கு கிராம நிர்வாக அலுவலர் பழனிசாமி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. உதவி செயற்பொறியாளர் செந்தில்குமார் தகவலின் பேரில் வந்து யானையை பார்வையிட்டு மின்சாரம் தாக்கிதான் யானை இறந்ததாக தெரிவித்தார்.

4. மாவட்ட வனஅலுவலர் மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு மேற்படி யானை அருகில் இருநத் மின் கம்பத்திலிருந்து மின்சாரம் எடுத்து மின்வேலி அமைத்து அதில் சிக்கி இறந்துள்ளது என்பதை முடிவு செய்தனர். அன்று மாலை கால்நடை மருத்துவர் பிரகாஷ் என்பவர் அந்த யானையின் பிரேதத்தை பிரதே பரிசோதனை செய்தார்.

5. சம்பவ இடத்தில் யானை தந்தம் 2 மற்றும் 10 புரசன் குச்சி மற்றும் கட்டு கம்பி 5 கிலோ கைப்பற்றி மேட்டுர் வனச்சரகத்துக்கு கொண்டு வந்தோம். எதிரி தங்கவேல் மீது வழக்கு பதிவு செய்து தேடிக் கொண்டிருக்கும்போது 16.12.2019 ல் மாலை 5.00 மணிக்கு நான் செய்த குற்றம் உண்மைதான் என்று ஒப்புக்கொண்டு மேட்டுர் வனச்சரகத்தில் ஆஜர் ஆனார். எதிரி தங்கவேல் மீது வழக்கு பதிவு செய்து அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்று உடல் பரிசோதனை செய்து பிறகு நீதிமன்றத்திற்கு ஆஜர் படுத்தி 15 நாள் காவலில் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

6. 17.12.2019 ம் தேதி காலை 10 டு 11 மணிக்குள் பிடிபொருள் 10 குச்சி 5 கிலோ கட்டுகம்பி 2 யானை தந்தம் ஆகியவற்றை கொண்டு வந்து நீதிமன்றத்தில் ஆஜர்

படுத்தினோம். நீதிமன்ற நடுவர் அவர்களின் உத்தரவுபடி உங்களுடைய வனச்சரகத்திலேயே இருக்கட்டும் என்று சொன்னதால் நாங்கள் மீண்டும் பிடிபொருளை மேட்டூர் வனச்சரகத்திற்கு கொண்டு வந்து விட்டோம்.

7. இது சம்பந்தமாக வனச்சரக அலுவலர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பில் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.20 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**